# பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் எதிர் நோக்கும் சமூக, பொருளாதார பிரச்சினைகள் - முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள் குடியேற்றம் செய்யப்பட்ட பிரதேசங்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

**சு. உதயராசா**

புவியியற்றுறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
usubageo@gmail.com

**சுருக்கம்:** இன்று உலகில் பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் அதிகரித்துச் செல்வது முக்கிய ஒரு சமூகப் பிரச்சினையாக தோன்றி உள்ளது. இந்த வகையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பிரதேசங்களில் பெண் தலைமை தாங்கும் குடும்பங்களின் எண்ணிக்கை மிக அதிகமாக காணப்படுகின்றது. பொதுவாக இக்கட்டுரையில் பெண்கள் குடும்பத்திற்குத் தலைமை தாங்குவது என்பது பல காரணிகளின் நிமிர்த்தம் ஏற்படக் கூடியதாக இருப்பினும் இங்கு கணவனின் இறப்பின் விளைவாக உருவாகிய குடும்பங்கள், மனமொருமித்து குடும்பமாக வாழ முடியாது சட்ட ரீதியாக விவாகரத்துப் பெற்ற குடும்பங்கள் மட்டுமே உள்ளடக்கப்பட்டுள்ளது. இக்குடும்பங்களின் சமூக, பொருளாதார நிலை குறித்தும், இக்குடும்பப் பெண்கள் சமூக, பொருளாதார ரீதியில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும், இக்குடும்பங்களை முன்னேற்றுவதற்கு எவ்வாறான திட்டங்களை முன் வைக்கலாம் என்பது குறித்து ஆய்வு செய்வதும், பிரச்சினைகளுக்கான காரணங்களைக் கண்டறிந்து அவற்றிற்கான தீர்வுகளை முன் வைப்பதும் இவ் ஆய்வின் நோக்கங்களாக உள்ளன. ஆய்வுப் பிரதேசத்தில் உள்ள ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளில் 616 கிராமங்களில் மக்கள் மீள் குடியமர்த்தப்பட்டுள்ளனர். இங்கு 30,359 குடும்பங்களில் 3775 குடும்பங்கள் பெண் தலைமைதாங்கும் குடும்பங்களாக உள்ளன. இவர்களில் 375 குடும்பங்கள் எல்லாக் கிராமங்களையும் உள்ளடக்கும் வகையில் எழுமாற்றாக தெரிவு செய்யப்பட்டு வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டன. அத்துடன் நேரடி அவதானம், பேட்டி காணல், கலந்துரையாடல் போன்ற முறைகள் மூலமும் தரவுகள் சேகரிக்கப்பட்டன. இவ் ஆய்விற்காக இரண்டாம் நிலைத் தரவுகளும் சேகரிக்கப்பட்டு, பெறப்பட்ட தரவுகளானது கணினி மூலம் குறிப்பாக Excel Package மூலமும், புவியியல் அளவைசார் நுட்ப முறை மூலமும், (Quantitative technique in Geography) எளிய புள்ளிவிபர முறை மூலமும் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இவ்ஆய்வில் பெறப்பட்ட தரவுகளின் பகுப்பாய்வுகள் மூலம் பெறப்பட்டமுடிவுகளின் படி பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் சமூக பிரச்சினைகளாக சமூக அந்தஸ்து குறைவு, கல்வி அறிவு குறைவு, வீட்டு வசதிகள் சீராக இல்லாமை, மலசல கூட வசதிகள் இல்லாமை இதனால் சுகாதார சீர்கேடுகள், பாதுகாப்பின்மை என்பனவும் பொருளாதார பிரச்சினைகளாக வேலையின்மை, வருமானமின்மை, வறுமை இதனால் பிள்ளைகள் சிறந்த கல்வியை பெற முடியாத நிலை, போசாக்கான உணவின்மை போன்றன அடையாளம் காணப்பட்டுள்ளன. இதனை விட உளவியல் ரீதியான பிரச்சினைகளும் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இவற்றிற்கான தீர்வுகளாக முதலில் குடும்பங்களை தலைமை தாங்கும் பெண்களுக்குரிய சமூக அந்தஸ்தினை வழங்க வேண்டும். ஏனைய பெண்களைப் போல அவர்களையும் சமூகத்தில் மதித்து நடக்க வேண்டும். இளவயது விதவைகள் மறுமணம் செய்வதை அங்கீகரித்தல் வேண்டும். இப்பெண்களின் சமூக அந்தஸ்து உயரும் போது சமூகப் பாதுகாப்பு தானாகவே ஏற்பட்டு விடும். அரசும், அரச சார்பற்ற நிறுவனங்களும் இவர்களுக்கு வேண்டிய வீட்டு வசதிகளையும், கிணறு, மலசலகூட வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இவர்களின் பிள்ளைகள் கல்வியை சிறந்த முறையில் பெறுவதற்கு பொருத்தமான வழிமுறைகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். பொருளாதார பிரச்சினைகளுக்குரிய தீர்வாக இவர்களின் கல்வித்தகமைக்கு ஏற்ப வேலை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். பணத்தையோ, பொருட்களையோ தொடர்ந்து வழங்கிக் கொண்டிருக்காமல் வருமானத்தை நிரந்தரமாக கிடைக்கச் செய்தால் முன்னேறிச் செல்வார்கள். கல்வி அறிவுடையவர்களுக்கு சிறு வேலைவாய்ப்பையும், ஏனையோருக்கு சுயதொழில் முயற்சிகளையும் (கோழி வளர்த்தல், ஆடைகள் தைத்தல், பப்படம் தயாரித்தல், கயிறு திரித்தல், பன்ன வேலைகள், கைப்பணிப் பொருட்கள் செய்தல்) ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் அவர்கள் தொடர்ந்து வருமானத்தைப் பெற முடியும். அத்துடன் தலைமை தாங்கும் பெண்களிடம் மறைந்திருக்கக் கூடிய ஆளுமை, தன்னம்பிக்கை, துணிவு, மனவுறுதி என்பவற்றை வெளிக்கொணரும் வகையில் பயிற்சிப் பட்டறைகள், கருத்தரங்குகள் போன்றவற்றினை நடாத்தி வலுவுள்ளவர்களாக்க வேண்டிய பொறுப்பு அரசு மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களுக்குரியது. இந்தவகையில் பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் எதிர் நோக்குகின்ற பல்வேறு பிரச்சினைகளையும் அதற்கான பின்னணிகளையும் தீர்வுகளையும், ஆலோசனைகளையும் வெளிக்கொணரும் ஒரு ஆய்வாக இது அமைகின்றது.